9th September 1959]

SRI M. S. SELVARAJAN : திருநெல்வேலி ஜில்லா போர்டில் ஜில்லா போர்டுக்குச் சொந்தமான ரஸ்தாக்களில் கடந்த இரண்டு வருஷ காலமாக பராமரிப்பு வேலை அறவே நடக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி ஜில்லா போர்டு ரஸ்தாக்கள் எல்லாவற்றையும், சர்க்கார் மூலமாக எடுத்துக் கொள்ளாவிட்டாலும் தற்காலிகப் பராமரிப்பு வேலைக்காவது எடுத்துக்கொண்டு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் வரும்போது அதனிடம் ஒப்படைக்க வேண்டுமென்று ஜில்லா போர்டு ஸ்பெஷல் ஆபீசர் சர்க்காருக்கு கோரிக்கை அனுப்பியிருக்கிறாரா? அப்படியானால் அது கவனிக்கப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : திருநெல்வேலி ஜில்லா போர்டு மட்டுமின்றி மற்ற ஜில்லா போர்டுகளும் இத்தகைய கோரிக்கையை சமர்ப்பித்திருக்கின்றன. இந்த கோரிக்கைகளை சர்க்கார் கவனித்து வருகிறது.

SRI J. MATHA GOWDER : நீலகிரி போன்ற மலைப் பிராந்தியங்களில் ரோடுகள் சரிவரப் பராமரிக்கப்படாமல் இருப்பதால் அவை நல்ல நிலையில் இல்லை. எனவே நீலகிரி போன்ற மலைப் பிராந்தியங்களில் உள்ள ஜில்லா போர்டு ரோடு எல்லாவற்றையும் பரீட்சார்த்தமாக சர்க்கார் எடுத்து நடத்த ஒரு திட்டம் வகுக்கப்படுமா?

MR. SPEAKER : This question is about Tirunelveli. How can the Hon. Minister answer a question about Nilgiris?

SRI A. R. SUBBIAH MUDALIAR : திருநெல்வேலி ஜில்லா போர்டு வில்லேஜ் ரோடுகள் எத்தனை வருஷ காலமாகப் பராமரிக்கப் படவில்லை? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN : வில்லேஜ் ரோடுகளைக் கணக்கெடுத்துச் சொல்லுவது என்றால் நாட்கணக்கில் அவகாசம் வேண்டும். ஆகவே அதற்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

State Police Department

* 247 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

பீகார் மாகாண போலீஸ் கமிஷன் இந்த ராஜ்யத்தில் வந்து நம் ராஜ்ய போலீஸ் இலாகாவைப் பற்றி அறிந்து சென்றனரா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

* 248 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

இந்த ராஜ்ய போலீஸ் இலாகாவை சீரமைக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI S. M. ANNAMALAI : இந்த மாநிலத்தில் பீஹார் மாநில போலீஸ் கமிஷனர் சுற்றுப்பிரயாணம் செய்தார். சென்னை மாநிலப் போலீஸ் இலாகா பீஹார் மாநிலப் போலீஸ் இலாகாவைவிடத் திறமையாக வேலை செய்கிறது என்பதால் அவர் இங்கே சுற்றுப்பிரயாணம் செய்தாரா ? அவருடைய முடிவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்வியை பீஹார் மாநில சட்ட மன்றத்தில் போட வேண்டும். இதற்கு நான் பதில் சொல்ல முடியாது.

[9th September 1959

SRI K. ANBAZHAGAN : வேலூரிலுள்ள போலீஸ் சுருக்கெழுத்தாளர்களை பல பகுதிகளாகப் பிரித்து தமிழ்நாட்டில் இரண்டு, மூன்று ஜில்லாக்களில் வைத்திருப்பது நல்லது என்று மதிப்பிற்குரிய அமைச்சர் கருதுகிறாரா ? அப்படியானால் அவ்வாறு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த இலாகாவை சிரமைக்கும் உத்தேசம் இப்போது இல்லை என்று பதிலளித்தேன். இவைகளையெல்லாம் மற்ற மாவட்டங்களிலும் விஸ்தரிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

SRI K. B. S. MANI : இந்தியாவிலேயே சென்னை மாநிலப் போலீஸ் மிக நல்ல முறையில் வேலைசெய்து வருகிறது என்பது இந்தியா பூராவும் தெரிந்திருந்தும், அந்த இலாகாவின் நூற்றாண்டு விழாவைப் பெருமையாகக் கொண்டாடியதோடு சிரமைப்பு முடிந்துவிட்டதா, அல்லது அவர்களுக்கு போனஸாவது, சம்பள உயர்வாவது கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER : The hon. Member must put a separate question.

SRI A. A. RASHEED : Is there any proposal to increase the strength of the police force in our State?

MR. SPEAKER : How does that arise now?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

Sathanur dam

* 249 *Q.*—SRI P. U. SHANMUGAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

சாத்தனூர் அணையின் மேற்புறம் அமைக்கப்படவேண்டிய கதவுகள் எப்போது அமைக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : The matter is under consideration.

SRI P. U. SHANMUGAM : இப்படி ஆலோசனை எத்தனை ஆண்டு காலம் தள்ளிப்போடப்படும் ?

(No answer.)

Sale of manure

* 250 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government intend to cancel individual licences to deal in manure where Co-operative societies have been formed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI K. SATTANATHA KARAYALAR : கூட்டுறவு ஸொஸைடிகள் இருக்கும் இடங்களில் ஏன் சர்க்கார் புனராலோசனை செய்யக்கூடாது ? உரம் தனிப்பட்டவர்களுக்கு மிக அதிகமாகவும், சுமார் 5 பங்கும், கூட்டுறவு ஸொஸைடிக்கு ஒரு பங்கும் கொடுக்கப்படுகிறதே ; இதை ஏன் சர்க்கார் கூட்டுறவு ஸொஸைடிகளுக்குக் கொடுக்கக்கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது 'கான்ஸல்' செய்யப்படுமா என்று கேட்டதற்கு 'இல்லை' என்று பதில் சொன்னேன். லைஸென்ஸ் கான்ஸெல் ஆவதில்லை. அது வருஷா வருஷம் ரென்யூ ஆகிறது. மறுபடியும் அதை ரென்யூ பண்ணும்போது சம்பந்தப்பட்ட கூட்டுறவு ஸொஸைடி இருக்கிறதா என்று பார்த்துத்தான் அது கொடுக்கப்படுகிறது.